# 2016 இன் 12 ஆம் இலக்க தகவல்களை அறியும் உரிமைகள் பற்றிய சட்டத்தின் கீழ் பகிரங்க அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கான கோரிக்கைகளும் அவற்றிற்கான பிரதிபலிப்புகளும் பற்றி தயாரிக்கப்பட்ட ஆய்வு அறிக்கை


Friedrich Naumann STIFTUNG FÜR DIE FREIHEIT

பெட்ரிக் நியூமான் மன்றம் (FNF)

CPA
Centre for Policy Alternatives

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்

பெட்ரிக் நியூமான் மன்றத்துடன் (FNF) இணைந்து இப்பிரசுரம் வெளியிடப் படுகின்றது. சுதந்திரம் பொறுப்புடைமை என்பவற்றின் விழுமிய மதிப்பீட்டுடன் இம் மன்றத்தின் நடவடிக்கைகள் குவிமையப்படுத்தப்பட்டுள்ளன. புதிய கருத்திட்டங்களின் ஊடாகா பெட்ரிக் நியூமான் மன்றம் (FNF) அனைத்து மக்களின் சுதந்திரம், மானுட மாண்பு என்பவற்றுடன் சமாதானமாக வாழக்கூடிய உலகை சிருஷ்டிப்பதற்கு பங்களிப்பு செய்கின்றது.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் என்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல் மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

முகவரி : 6/5, லெயாட்ஸ் வீதி, கொழும்பு–05

தொலைபேசி : 011 2370803/4 ∴பக்ஸ் : 011 2370801/2

இணையதளம் : www.cpalanka.org

மின்னஞ்சல் : info@cpalanka.org

# <u>உள்ளடக்கம்</u>


**1. அறிமுகம்**

**2. ஆய்வின் குறிக்கோள்**

**3. ஆய்வின் எல்லைகள்**

**4. ஆய்வின் வழிமுறைகள்**

**5. தகவல்களைக் கோரல் பற்றிய தரவுகள்**

5.1 சமர்ப்பிக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைகள் பற்றி ஏதாவது பிரதிபலிப்பு கிடைத்த எண்ணிக்கை அல்லது கிடைக்காத எண்ணிக்கை

5.2 சமர்ப்பிக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைகளுக்கான தகவல்கள் கிடைத்த எண்ணிக்கை அல்லது தகவல்கள் கிடைக்காத எண்ணிக்கை

5.3 நிராகரிக்கப்படாத தகவலுக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை மற்றும் நிராகரிக்கப்பட்ட தகவல்களுக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை

5.4 சமர்ப்பிக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைகளுக்கு ஏற்புடைய வகையில் மேற்படித் தகவல்கள் அவர்களிடம் இல்லை. அல்லது அவற்றை வேறு நிறுவனங்களிடம் இருப்பதாக அறிவித்து மேற்படித் தகவல்களுக்கான ஏற்புடைய தன்மையை நிறுவனங்களுக்குச் சமர்ப்பித்தல் பற்றிய நிலைமை

5.5 தகவலுக்கான கோரிக்கை தொடர்பாக மேற்கொண்ட எதிர்கால நடவடிக்கைகள் பற்றி 14 நாட்களுக்குள் அறிவித்தாலும் இதுவரை அதன் பின்னர் எதுவிதப் பிரதிபலிப்பும் கிடைக்காதவை பற்றி ய எண்ணிக்கை

5.6 அடிப்படை மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் கிடைத்த தகவல்களின் எண்ணிக்கை மற்றும் கிடைக்காதவற்றின் எண்ணிக்கை

**6. ஆய்வின் கண்டறிதல்கள்**

6.1 பகிரங்க அதிகார சபைகளின் தகவலறியும் உரிமைச் சட்டம் பற்றிய கண்ணோட்டம்

6.2 தகவல்களை கோருவது பற்றிய பிரதிபலிப்புக்களின் நிலைமை

6.3 தகவல்களைக் கோருவது பற்றிய செயற்பாடுகளின் போது சட்டத்தின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட கால வரையரை பற்றி பகிரங்க அதிகார சபைகள் கவனிக்கின்றனவா?

6.4 தகவல்களைக் கோருவதற்கு பிரதிபலிப்பைக் காட்டும் வகையில் பகிரங்க அதிகார சபைகளினால் கடிதங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் சில குறைபாடுகள்

6.5 மேற்படி சமமான தகவல்களைக் கோருகையில் அதற்கு உரித்தான சமமான பகிரங்க அதிகார சபைகள் மேற்படி தகவல்கள் தொடர்பாக பொதுவான திட்டவட்டான கருத்தை கொண்டிராத சந்தர்ப்பங்கள்

6.6 பகிரங்க அதிகார சபைகளிடம் ஏற்புடைய தகவல்கள் இல்லாதுவிடின் அவை அது தொடர்பாக சரியான நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கின்றனவா ?

6.7 நியாயமான காரணங்களின் நிமித்தம் அல்லது வேறு காரணங்களின் நிமித்தம் தகவல்களை வழங்குவது நிராகரிக்கப்படுகின்றனவா ?

6.8 பிரதிபலிக்க நீண்டகாலம் எடுக்கப்படும், தகவல்களை அறியும் உரிமை பற்றிய சட்டம் வரை உள்ள ஒழுங்கான செயல்முறை பகிரங்க அதிகார சபைகளினால் அனுசரிக்கப்படுகின்றதா?

6.9 தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் மூலம் மேலும் உள்ளடக்க வேண்டிய துறைகள்

**7. அடையாளம் கண்ட குறைபாடுகள், தவறுகள் என்பவற்றை தவிர்த்துக்கொண்டு இலங்கைப் பிரஜைகளின் தகவலறியும் உரிமையைப் பாதுகாப்பதற்கும் அவற்றை ஒழுங்குமுறைப்படுத்துவதற்குமான பரிந்துரைகள்**

## 1. அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் 2016 ஆகஸ்ட் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு, 2016 ஆகஸ்ட் 05 ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானிப் பத்திரத்தின் இரண்டாம் பகுதியில் ஓர் அனுபந்தமாக வெளியிடப்பட்ட 2016 இன் பன்னிரண்டாம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களுக்குள் சாதகமான பண்புரீதியான பல அம்சங்களைக் கொண்ட நேர்மறையான ஜனநாயக நடிக்கையாகக் கருத முடியும். ஏனெனில், தகவல்களை அறியும் உரிமை. அடிப்படை உரிமையாக அடையாளம் காணுதல், மேற்படி உரிமையை வலுவாக்கம் செய்வதன் மூலம் பகிரங்க அதிகார சபைகளின் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்களைப் பற்றிய கலாசாரத்தை போஷிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். இதன் மூலம் இலங்கையின் பிரஜைகளுக்கு நல்லாட்சிக்கான கூடிய பங்களிப்பைச் செய்யக்கூடிய மற்றும் நாட்டின் பொதுமக்களின் வாழ்க்கையை சாதகமான முறையில் பங்கேற்கக்கூடிய, சமூகத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் ஆகிய விடயங்கள் காரணமாகவே ஆகும். தகவல்களுக்கான பிரவேச உரிமை அடிப்படை உரிமையாக 1978 இன் அரசியலமைப்பிற்கு மேற்கொள்ளப்பட்ட 19வது திருத்தத்தினூடாக அனைத்துப் பிரஜைகளுக்கும் உரித்தாக்கப்பட்டுள்ளது. அரசின் மிக உன்னதமானதும் அடிப்படைச் சட்டத்தினூடாக இந்த உரிமை அத்தாட்சிப்படுத்தப்படுவதனூடாக அரசின் செயற்பாடுகளில் நடைமுறையிலுள்ள ஜனநாயக விழுமியங்களை பேணிப் பாதுகாப்பதும் பொருள்கோடல் செய்வதும் உசிதமானது. அதே சமயம் பகிரங்க அதிகாரசபையின் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயற்பாடு தொடர்பாக பிரஜைகளுக்கு குறித்துரைக்கப்பட்ட நிலைப்பாடு சம்பந்தமான நம்பகத்தன்மையை கட்டியெழுப்புவதற்கு அரசியலமைப்பு ரீதியான பாதுகாப்பை வழங்குவதன் முக்கியத்துவம் இதன்போது உள்ளடக்கப்படும். அரசியலமைப்பு ஏற்றுக்கொண்ட இத்தகவல்களுக்கான நுழைவாயில் சட்டத்தின் அடிப்படைகள், 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைகள் பற்றி சட்டத்தில் இதற்கு ஏற்புடையவாறு இந்தச் சட்டத்தின் அடிப்படைகள் மேலும் விவரமாகவும் நடைமுறைச் சட்டத்தில் தெளிவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய அரசியலமைப்பின் பாதுகாப்பைப் பெறும் இந்த உரிமை 2016 இன் பன்னிரண்டாம் இலக்கச் சட்ட ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றன. இதற்கமைய 2016 இன் 12 ஆம் இலக்க தகவல்களை அறியும் உரிமை பற்றிய சட்டத்தின் 3வது வாசகம் உரித்தாக்கிக்கொண்ட தகவல்களுக்கான பிரவேசம் பிரஜைகளின் உரிமைகளாகும். பகிரங்க அதிகார சபையின் விடயங்கள் மீது மட்டுப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது, இல்லையேல் பகிரங்க அதிகார சபைகளிடமுள்ள அல்லது அதன் கட்டுப்பாட்டில் உள்ள தகவல்களுக்கு பிரவேசிக்கும் உரிமை மாத்திரம் பிரஜைகளுக்கு உரித்தாக்கியுள்ளது. சட்டத்தின் 43வதுவாசகத்தில் "பகிரங்க அதிகார சபை என்பதற்கு பரந்துபட்ட பொருள்கோடல் வழங்கப்பட்டுள்ளது.[1] எனவே பகிரங்க அதிகார சபை அல்லாத வேறு எந்தவித நிறுவனத்திலிருந்தும் தகவல்களைக் கோரும் உரிமை பிரஜைகளுக்குக் கிடையாது.

---

[1] பகிரங்க அதிகார சபை என்பது (அ) அரசாங்கத்தின் அமைச்சு (ஆ) அரசியலமைப்பிலோ அல்லது (உ) பந்தியின் கீழ் திட்டவட்டாகக் குறிப்பிடப்பட்டுள்ள அளவை விட 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் தவிர்ந்த ஏதாவது எழுத்து மூலச் சட்டத்தின் அல்லது மாகாண சபையொன்றின் நியதிச் சட்டத்தின் மூலம் "அமைக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட சபை அல்லது அலுவலகம் (இ) அரசாங்கத் திணைக்களங்கள் (ஈ) அரச கூட்டுத் தாபனங்கள் (உ) தமது பங்குகளில் 25 வீதம் அல்லது அதனைவிடக் கூடிய அளவு அல்லது வேறு வகையில் நிர்வகிக்கப்படும் உரிமை கொண்ட அரச அல்லது அரச கூட்டுத்தாபனம் இணைந்து மேற்கொள்ளும் 2007 இன் கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட கம்பனி (ஊ) உள்ளூராட்சி நிறுவனம் (எ) அரசாங்கம் அல்லது அதன் பிரதிநிதித்துவ நிறுவனம் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தின் கொந்தராத்து, கூட்டுத் தொழில் முயற்சி, உடன்படிக்கை அல்லது உத்தரவுப் பத்திரத்தின் கீழ் சட்டபூர்வமான அல்லது பொதுப்பணிகளை மேற்கொள்ளும், ஆனால் மேற்படி சட்டவாக்க அல்லது பகிரங்க நடவடிக்கைகள் மூலமும் அல்லது பொதுச்சேவைகளை உள்ளடக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் செயற்பாடுகளின் அளவிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட தனியார் உரித்தாளர்கள் அல்லது ஓர் அமைப்பு (ஏ) பொதுமக்களிடம் ஒரு சேவையை வழங்கும் மற்றும் வழங்குமாறு கோரும் தகவல்களை பொதுமக்களுக்கு வழங்கும் சேவைக்கு ஏற்புடையதாகும்.

அரசாங்கம் அல்லது குறிப்பிட்ட திணைக்கம் மாகாண சபை மூலம் நிறுவப்படும் அல்லது உருவாக்கப்படும் வேறு ஓர் அதிகார சபை அல்லது வெளிநாட்டு அரசாங்கம் அல்லது சர்வதேச நிறுவனத்தின் மூலம் குறிப்பிடத்தக்க அளவு நிதி வழங்கப்படும் அரச சார்பற்ற நிறுவனம், (ஐ) ஏதாவது எழுத்துமூல சட்டத்தின் கீழ் அமைக்கப்படும், அடையாளம் காணப்படும் அல்லது உத்தரவுப் பத்திரம் வழங்கப்படும். அல்லது அரசு அல்லது அரச கூட்டுத்தாபனத்தின் மூலம் அல்லது மாகாண சபை நியதிச் சட்டத்தின் கீழ் அமைக்கப்படும் மற்றும் உருவாக்கப்படும் ஏதாவது சட்டவாக்கச் சபை மூலம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிதியுதவி வழங்கும் தனியார் பல்கலைக்கழகம் மற்றும் தொழில் சார் நிறுவனம் உட்பட உயர்கல்வி நிறுவனங்கள் (ஓ) ஏதாவது எழுத்து மூலச் சட்டத்தின் கீழ் அமைக்கப்படும், அங்கீகரிக்கப்படும் அல்லது உத்தரவுப் பத்திரம் வழங்கப்படும் அல்லது அரசு அல்லது அரசக் கூட்டுத்தாபனத்தின் மூலம் அல்லது மாகாண சபைச் நியதிச் சட்டத்தின் கீழ் அமைக்கப்படும் அல்லது உருவாக்கப்படும் சட்ட ரீதியான சபையின் மூலம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிதியுதவி வழங்கும் தொழில்சார் அல்லது தொழில்நுட்பக் கல்வி வழங்கும் நிறுவனங்கள் உட்பட தனியார் கல்வி நிறுவனங்கள் (ஔ) நீதி வழங்குவதற்கு அமைக்கப்பட்டுள்ள நீதிமன்றம் அல்லது நியாயசபை மற்றும் நிறுவனங்கள் என்பனவாகும்.

## 2. ஆய்வின் நோக்கம்

இந்த நிறுவனத்தின் அடிப்படைக் குறிக்கோள் 2016 இன் 12ஆம் இலக்கத் தகவல்களை அறியும் உரிமை பற்றிய சட்டத்தினால் குறிப்பிடப்படும் நடைமுறைகளை நடைமுறை ரீதியில் ஆய்வு செய்தல், விசாரணை செய்தல் மற்றும் பலவீனங்களை அடையாளம் கண்டு பிரஜைகளுக்குரிய தகவல்களை அறியும் உரிமையை ஒழுங்குறுத்தலுக்காக முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல் அதே சமயம் அடையாளம் காணப்பட்ட சாதகமான பண்புகளை மதித்தல் பாராட்டுதல், பலவீனங்களுக்கு உரிய யோசனைகளை முன்வைத்தல் மற்றும் தகவல்களை அறியும் உரிமை பற்றிய சட்டத்தின் நோக்கங்களை திருப்தி செய்வதற்கு அவசியமான கொள்கைரீதியான முன்மொழிவுகளை சமர்ப்பித்தல் இதற்கு மேலதிகமாக தகவல்களுக்கான கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கையில், பிரஜைகள் எதிர்நோக்கும் நடைமுறை நெருக்கடிகளையும் தகவல்களை அறிவதற்கான உரிமைகள் பற்றிய பகிரங்க அதிகார சபைகளின் சேவைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணக்கருக்கல் பற்றிய விடையங்களையும் ஆய்வு செய்வது எதிர்பார்க்கப்படுகிறது.

## 3. ஆய்வின் எல்லைகள்

இந்த ஆய்வு விசேடமாக 2016 இன் 12 ஆம் இலக்க தகவல்களை அறிவதற்கான உரிமை பற்றிய சட்டத்தின் மூலம் வெளிப்படுத்தும் நடைமுறைகளைக் கற்றல், புலனாய்வு செய்தல் மற்றும் பலவீனங்களை அடையாளம் காண்பதற்கு மேற்கொண்ட ஆய்வே ஒழிய தகவல்களை அறியும் உரிமை பற்றிய உரிமை மற்றும் இச்சட்டத்தின் சாராம்சம் பற்றி மேற்கொண்ட கற்கை அல்ல என்பதையிட்டு கவனித்தல் வேண்டும். இதன்போது நாம் தகவல்களைக் கோருவது பகிரங்க அதிகார சபையிடம் சமர்ப்பித்து அதன் பெறுபேறுகள் எவை? என்பது பற்றிய கற்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கமைய ஏற்புடைய பகிரங்க அதிகார சபையினுள் தகவல் கோரிக்கை சம்பந்தமாக செயற்படும் வழிமுறை மாத்திரம் அடிப்படையில் ஆய்வுசெய்யப்பட்டது. அதே சமயம், இக்கற்கையின் போது வெறுமனே ஏற்புடைய பகிரங்க அதிகார சபையின் ஆரம்ப சந்தர்ப்பத்தில் செயற்படும் வழிமுறை ஆய்வுக்குட்படுத்தப்பட்டதோடு அது ஆரம்ப தகவல் கோரிக்கையாக அல்லது பின்னர் அதே நிறுவனத்தின் பெயர் குறித்தளிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் மேன்முறையீடு செய்வது வரை மாத்திரம் மட்டுப்படுத்தியதோடு, தகவல்களை அறிவதற்கான ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்யும் நடைமுறை வரை விரிவாக்கம் பெறமாட்டாது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

## 4. ஆய்வு முறைமை

இந்த ஆய்விற்காக அடிமட்டத்தில் வாழும் மக்கள் மத்தியிலிருந்து மாற்றுக் கொள்கைகள் நிலையத்தின் பொருட்டு சுட்டிக்காட்டப்பட்ட தகவல் கோரிக்கை அடிப்படையில் பயன்படுத்தப்பட்ட இந்த ஆண்டுத் துவக்கத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சனசமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித்திட்டப்பிரிவினால் அடிமட்டத்து செயற்பாட்டாளர்களுடன் தகவல்களை அறியும் உரிமை பற்றிய கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இதன்போது தகவல்களை அறியும் உரிமை பற்றிய சட்டத்தின் மூலம் பெறக்கூடிய தகவல்களைப் பற்றி நாம் கலந்துரையாட முடிந்தது. அதன் ஒரு படியாக அநுராதபுரம், காலி, மாத்தறை, கேகாலை, மொனராகலை, இரத்தினபுரி, திருகோணமலை, மாத்தளை, அம்பாறை, கம்பஹா, கொழும்பு, கண்டி, பதுளை, பொலனறுவை, புத்தளம், நுவரெலிய, ஹம்பாந்தோட்டை போன்ற மாவட்டங்களில் மக்கள் முன்வைத்த தகவல் கோரிக்கைகள் எம்மால் பகிரங்க அதிகார சபைகளிடம் சமர்ப்பிக்கப்பட்டன. அதற்கு உரித்தான தகவல்களைக் கோருதல் பிரஜைகளின் சார்பில் நாம் மேற்கொண்டோம். இதற்கு மேலதிகமாக மக்களுக்கு பொதுவாக முக்கியத்துவம் கொண்டது எனக் கருதும் தகவல்களின் கோரிக்கைகளுக்கு ஏற்புடைய பகிரங்க அதிகார சபைகளிடம் கோரப்பட்டன. இதற்கமைய 2018 பெப்ரவரி 16 ஆம் திகதியிலிருந்து 2018 மார்ச் 30 வரை அடிப்படை தகவல்களின் 203 கோரிக்கைகளை ஏற்புடைய பகிரங்க அதிகார சபைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.


## 5. தகவல்களுக்கான கோரிக்கை பற்றிய தரவுகள்

| சமர்ப்பிக்கப்பட்ட தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை | பிரதிபலிப்பு கிடைத்த தகவல்களுக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை | பிரதிபலிப்பு கிடைக்காத தகவல்களுக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 203 | 187 (92%) | 16 (8%) |


பகிரங்க அதிகார சபைகளிடம் தகவலுக்கான 203 கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றுள் 187 தகவல்களுக்கான கோரிக்கைகளுக்கு பிரதிபலிப்பு கிடைத்தது. 16 தகவல் கோரிக்கைகளுக்கு பிரதிபலிப்பு கிடைக்கவில்லை.

மேற்படி தரவுகளுக்கு அமைய இத்தகவல்களுக்கான கோரிக்கைகள் சாதாரண தபாலில் கோரப்படாமல் பதிவுத் தபாலில் ஏற்புடைய பகிரங்க அதிகார சபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மேற்படி தகவல்களுக்கான கோரிக்கை எம்மால் கையொப்பம் இடப்பட்ட திகதி இங்கு குறிப்பிடப்படவில்லை. பதிவுத் தபாலுக்கு கோரிக்கைகள் ஒப்படைக்கப்பட்ட திகதியே ஆய்வின் போது நாம் பயன்படுத்தியுள்ளோம். இங்கு தகவல்கள் கோரிய திகதியை விடுத்து பதிவுத் தபாலில் மேற்படிக் கோரிக்கைகளை சமர்ப்பித்த திகதியையே நாம் பயன்படுத்தினோம் பகிரங்க அதிகார சபையிடம் மேற்படித் தகவல்களைக் கோரியமை அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஒழுங்கு முறையை அனுசரிப்பதற்கே இவ்வாறு செய்தோம் இதன்மூலம் சட்டத்தில் குறிப்பிடப்படும் கால எல்லையினுள் குறித்த பகிரங்க அதிகார சபை செயற்படுகின்றதா ? என்பது பற்றி ஆய்வு செய்வதே எமது குறிக்கோளாக அமைந்தது. இதற்கமைய சட்டம் வலியுறுத்துவது போல தகவல்களுக்கான கோரிக்கைகளை விடுத்த பின்னர் 14 வேலை நாட்களுக்குள் ஏற்புடைய பகிரங்க அதிகார சபையின் தகவல் உத்தியோகத்தர் இது தொடர்பான பதிலை வழங்க வேண்டும். இது எம்மால் ஆரம்பிக்கப்பட்ட ஆய்வின் முறைசார் தன்மைக்கு ஏற்புடைய உபாயமார்க்கமாகும். எனவே, 2018 பெப்ரவரி 22 ஆம் திகதி, 2018 மார்ச் 13 ஆம் திகதியும் 23 ஆம் திகதியும் 2018 ஏப்ரல் 03 ஆம் திகதி ஆகிய திகதிகளில் ஏற்புடைய தகவல்களை பதிவுத் தபாலில் சேர்க்கப்பட்ட திகதிகள் ஆகும். வலியுறுத்தப்படுகிறது.

### 5.1 சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கான கோரிக்கைகள் பற்றி ஏதாவது பிரதிபலிப்பு கிடைத்த எண்ணிக்கை அல்லது கிடைக்காத எண்ணிக்கை



**ஏதாவதொரு பிரதிபலிப்பு கிடைத்த தகவல் கோரிக்கையின் வகையீடு**




நான்கு மட்டங்களின் கீழ் 203 தகவல்களுக்கான கோரிக்கைகள் பகிரங்க அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அவற்றுள் இதுவரை எதுவிதமான பிரதிபலிப்பும் கிடைக்காத தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை 187 ஆகும். இங்கு எதுவிதமான பிரதிபலிப்பும் கிடைத்த தகவல் கோரிக்கைகளின் வகைக்கு


- வேறு நிறுவனங்களுக்கு தகவல் கோரிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளதாக அறிவிக்கும் கடிதங்கள்
- தகவல்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் மூலம் கோரப்பட்ட தகவல்கள் மேலதிக விளக்கங்களைச் சுட்டிக்காட்டி அறிவிக்கப்பட்ட கடிதங்கள்
- தகவல் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன என்று அறிவிக்கும் கடிதங்கள்
- தகவல் கோரிக்கை பற்றி மேற்கொள்ளப்படும் எதிர்கால நடவடிக்கைகளைப் பற்றி 14 நாட்களுக்குள் அறிவிக்கப்படுவதாக அறிவித்து எழுதப்படும் கடிதங்கள் என்ற வேறுபாடு உள்ளடக்கப்பட்டுள்ளது.

எந்தவிதமான பிரதிபலிப்பும் கிட்டாத தகவலுக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை 16 அதே சமயம் தகவல்களைக் கோரிய பின்னர் அது பற்றி எதுவிதமான பிரதிபலிப்பும் கிடைக்காத கோரிக்கைகள் இதில் உள்ளடங்கும்.

இந்த ஆய்வின் போது கோரிக்கை விடுத்த 203 தகவல் கோரிக்கைகளில் 94 படிவங்களுக்கு நாம் கோரிய தகவல் வழங்கப்பட்டாலும், ஏற்புடைய தகவல்களின் இல்லாமை தொடர்பாக தொடர்புகொண்டாலும் பின்வரும் வகை, அதாவது நிராகரிக்கப்பட்ட 29 தகவல் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் கோரிக்கைகளுக்கு ஏற்புடைய வகையில் மேற்படி தகவல்கள் அவர்கள் கைவசம் இல்லை. அல்லது அவை வேறு நிறுவனத்திற்கு உரித்தானவை எனக் குறிப்பிட்டு மேற்படித் தகவல்கள் இருக்கக்கூடிய ஏற்புடைய நிறுவனங்களுக்கு 49 சமர்ப்பணங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இதற்கு ஏற்புடைய தகவல்களை வழங்குவது சம்பந்தமாக திட்டவட்டமான பதிலை அறிவித்த வகையீட்டுக்குரியவையாகும். இதன்படி ஏற்புடைய தகவல் கோரிக்கை தொடர்பாக திட்டவட்டமான விடையை அறிவித்தோரின் எண்ணிக்கை 172 ஆகும். இது ஒட்டுமொத்த நூற்றுவீதத்தில் 84.72 % ஆகும் . முன்னேற்றத்தைக் குறிப்பிடுவதோடு திட்டவட்டமான பதிலைக் கூறாதோரின் எண்ணிக்கை 31 ஆகும். அது ஒட்டுமொத்தமாக அதனுடைய 15.27 %சதவீதம் ஆகும்.

இந்நிலைமை தகவல்களை வழங்குவதைப் போலவே தகவல்கள் இல்லாமை பற்றி அறிவிப்பதற்கும் பகிரங்க சபைக்குரிய வகைப்பொறுப்புக் கூறுவது சாதகமாக அமுலாக்கப்பட்டுள்ளதென தோற்றுகிறது. அதே சமயம், மிகக் குறுகிய காலத்தில் அல்லது குறித்தளவு சாதகமான நிலைமைகள் தகவல் உரிமையை பேணுவதற்கான பகிரங்க அதிகார சபையின் நடவடிக்கை எடுத்துள்ளமையை குறிப்பிட வேண்டும்.

**5.2 சமர்ப்பிக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைகளுக்கான தகவல்கள் கிடைத்த எண்ணிக்கை அல்லது தகவல்கள் கிடைக்காத எண்ணிக்கை**





இங்கு நாம் சமர்ப்பித்த ஒட்டுமொத்த தகவல் கோரிக்கையிடையே கோரப்பட்ட தகவல்கள் 95 கிடைத்தன. அது 47% சதவீதமாகும். விண்ணப்பித்த தகவல்களில் கிடைக்காதவற்றின் அளவின் நூற்றுவீதம் 53% சதவீதமாகும். இது ஒட்டுமொத்த தகவல்களுக்கான கோரிக்கைகளில் 108 ஆகும்.

அதே சமயம், தகவல்களைக் கோருவதற்கான ஏற்புடைய தகவல்களில் கிடைத்த அளவு பெறும்பான்மையை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. மறுபுறும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் கோரிக்கைகளில் விண்ணப்பித்த தகவல்களில் கிடைக்காதவற்றின் எண்ணிக்கை பெரும்பான்மையாக அமைந்துள்ளதன் மூலம் இது குறிப்பிடத்தக்க பாதகமான ஒரு சுபாவத்தைக் கொண்டுள்ளது. 47% சதவீதம் அல்லது விண்ணப்பித்த தகவல்கள் கிடைத்தமை, இது அபிவிருத்தி செய்யக்கூடிய ஒரு பிரவேசத்தின் பண்பாகும். எனக் குறிப்பிட வேண்டும். இதன்போது சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கான கோரிக்கைகளை விண்ணப்பித்த தகவல்கள் கிடைக்காத வகைக்கு பின்வரும் துறை உள்ளடக்கப்படும்.

- வேறு நிறுவனங்களுக்கு தகவல் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாக அறிவித்த கடிதங்கள்
- தகவல் கோரிக்கை படிவத்தில் கோரியுள்ள தகவல்கள் மேலதிகமான விளக்கங்களை அனுப்புமாறு அறிவிக்கப்பட்ட கடிதங்கள்
- தகவல் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட கடிதங்கள்
- தகவல் கோரிக்கை பற்றி மேற்கொண்ட எதிர்கால நடவடிக்கைகள் பற்றி 14 நாட்களுக்குள் அறிவிக்கப்பட்ட கடிதங்கள்
- இதுவரை காலம் எதுவிதமான பிரதிபலிப்பும் கிடைக்காத தகவல் கோரிக்கை
- ஏற்புடைய நிறுவனம் பகிரங்க அதிகாரசபை இல்லை எனக் குறிப்பிட்டு நிராகரிக்கப்பட்ட படிவங்கள்
- ஏற்புடைய தகவல் தமது விடையப்பரப்பிற்கு உரித்தானது அல்ல என்பதை அறிவிக்கும் உள்ளடக்கம்


**5.3 நிராகரிக்கப்படாத தகவலுக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை மற்றும் நிராகரிக்கப்பட்ட தகவல்களுக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை**




இதன் போது நிராகரிக்கப்பட்ட தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை 29 இது நூற்றுவீதத்தில் 14% ஆகும் மேற்படி தகவல் கோரிக்கைகள் 29 இல் பெரும்பான்மையானவை ஏற்புடைய பகிரங்க அதிகார சபைகளினால் நிராகரிக்கப்பட்டன. ஏற்புடைய தகவல் கோரிக்கைச் சட்டத்தின் 5ஆவது உபவாசகத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய கோரிக்கை விடுக்கப்பட்ட தகவல்கள் அவர்களுடைய அதிகார சபையின் கட்டுப்பாட்டில் அல்லது பொறுப்பில் இல்லாமை என்ற காரணத்தின் மீது மிகச் சிறுபான்மை அளவு சட்டத்தின் ஐந்தாவது உபவாசகத்தின் ஏற்பாடுகளைச் சுட்டிக்காட்டாது வெறுமனே கோரும் தகவல்கள் தெளிவின்மை என்ற காரணத்தை முன்வைத்து நிராகரிக்கப்பட்டிருந்தன. தகவல்களுக்கான 174 கோரிக்கைகளில் நிராகரிக்கப்படாத தகவல்களின் எண்ணிக்கையின் வகையை ஏற்புடையதாக்கி அதனை நூற்றுவீதத்தில் 86 சதவீதமாக்கியுள்ளனர். எனினும் சட்டத்தின் 5வது உபவாசகத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய இந்த நிராகரிக்கப்படாத தகவல்களின் கோரிக்கை என்ற வகையில் உள்ளடக்கப்படும் என வலியுறுத்த வேண்டியுள்ளது. அதாவது

- வேறு நிறுவனங்களின் தகவல்களைக் கோருவதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கும் கடிதங்கள்.
- தகவல் விண்ணப்பப் படிவத்தில் கூறப்பட்ட மேலதிக விளக்கங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்ட கடிதங்கள்
- தகவல்களை கோரியமை பற்றி மேற்கொள்ளப்படவுள்ள எதிர்கால நடவடிக்கைகளைப் பற்றி 14 நாட்களுக்குள் அறிவிப்பதாக அனுப்பப்பட்ட கடிதங்கள் என்ற வகையில் இந்த வகையீடு உள்ளடக்கப்படும்
- இதுவரை எதுவிதமான பிரதிபலிப்பும் பெறாத தகவல்களுக்கான கோரிக்கை
- ஏற்புடைய தகவல்களோடு தொடர்புடைய கடமைகளை தமது நிறுவனத்திற்கு ஏற்புடையதல்ல என அறிவிக்கும் கடிதங்கள்
- ஏற்புடைய தகவல்கள் தமது விடயப்பரப்பிற்கு உரித்தானவை அல்ல என்று அறிவிக்கும் கடிதங்கள் என்பன உள்ளடக்கப்படும்.


**5.4 சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கான கோரிக்கைகளுக்கு ஏற்புடைய வகையில் மேற்படி தகவல்கள் அவரிடமில்லை அல்லது அவற்றை வேறு நிறுவனங்களிடம் இருப்பதாக அறிவித்து மேற்படி தகவல்களுக்கான ஏற்புடைய தன்மையை நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தல் பற்றிய நிலைமை (அவர்களால் கடிதம் மூலம் எமக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது)**




எமது நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கான 187 கோரிக்கைகளுக்கு ஏதேனுமொரு பிரதிபலிப்பு கிடைத்ததுடன் அவ்வாறு கிடைத்த பிரதிபலிப்புகளில் கோரப்பட்ட தகவல் எம்மால் சமர்ப்பிக்கப்பட்ட நிறுவனத்துடன் தொடர்புபடாததால் அதனை சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களுக்கு அந்த நிறுவனத்தாலேயே சம்பந்தப்பட்ட தகவலைக் கோரல் அல்லது சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்கள் பற்றி எமக்கு அறிவித்து குறித்த நிறுவனங்களிலிருந்து சம்பந்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டமையானது தகவல் கோரல் தொடர்பில் எமக்குக் கிடைத்த மிகவும் முக்கியமான பிரதிபலிப்பாக அமைந்தது.


அதன்படி சம்பந்தப்பட்ட நிறுவனத்தை வினவுமாறு தெரியப்படுத்தல் அல்லது குறித்த நிறுவனத்தால் ஏற்புடைய நிறுவனங்களுக்கு சமர்பிக்கப்பட்ட தகவல்களைப் பெறுவதற்கான 49 கோரிக்கைகள் காணப்பட்டதோடு அது ஏதேனுமொரு பிரதிபலிப்பு கிடைத்த கோரிக்கைகளின் எண்ணிக்கையில் 26 சதவீதத்தை பதிவுசெய்தது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இலங்கைப் பிரஜைகளுக்கு வழங்கப்பட்ட உரிமைகளை முறையாக பிரயோகிப்பதற்கு சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகார சபைகளினால் எடுக்கப்பட்ட ஒரு நகர்வாக எம்மால் புரிந்துகொள்ள முடியும் எவ்வாறாயினும் ஒப்பீட்டு ரீதியாக பல பகிரங்க அதிகார சபைகள் சம்பந்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஏனைய பொறுப்புவாய்ந்த நிறுவனம் பற்றிக் குறிப்பிடாது குறித்த தகவல் தம்மிடம் இல்லையெனத் தெரிவித்த பிரதிபலிப்பும் அத்துடன் நிராகரிப்புகளும் இடம்பெற்றுள்ளதால், தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையைப் பாதுகாப்பதில் அது ஏதேனும் எதிரிடையான அணுகுமுறையாக அமைந்திருந்தது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

**5.5 தகவல்களுக்கான கோரிக்கை தொடர்பாக மேற்கொண்ட எதிர்கால நடவடிக்கைகள் பற்றி 14 நாட்களுக்குள் அறிவித்தாலும் இதுவரை அதன் பின்னர் எதுவிதப் பிரதிபலிப்பும் கிடைக்காதவை பற்றிய எண்ணிக்கை**




சமர்ப்பிக்கப்பட்டதகவல் பெறுவதற்கான 203 கோரிக்கைகளில் 187 கோரிக்கைகளுக்கு ஏதேனும் பிரதிபலிப்பு கிடைத்திருந்த போதும் சம்பந்தப்பட்ட பொது அதிகார சபைகள் எம்மால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் பெறுவதற்கான கோரிக்கைகள் தொடர்பில் எடுக்கப்படும் அடுத்தகட்ட நடவடிக்கை பற்றி 14 நாட்களுக்குள் தெரியப்படுத்தப்படும் என்பதையே அறிவித்திருந்தன. எடுக்கப்பட்ட அடுத்தகட்ட நடவடிக்கை பற்றிய 14 நாட்களுக்குள் அறிவிக்கப்படும் எனத் தெரியப்படுத்தியிருந்த போதும் உரிய 14 நாட்கள் இயன்றளவில் கடந்துள்ள நிலையில் குறித்த அறிவிப்பின் பின்னர் எந்தவொரு பிரதிபலிப்பும் கிடைக்காத 09 கோரிக்கைகள் காணப்படுவதோடு ஏதேனும் பிரதிபலிப்பு கிடைக்காத தகவல் பெறும் கோரிக்கைகளில் 5 சதவீதமாகக் காணப்படுகின்றது என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

**5.6 அடிப்படை மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் கிடைத்த தகவல்களின் எண்ணிக்கை மற்றும் கிடைக்காதவற்றின் எண்ணிக்கை.**




எமது நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் பெறுவதற்கான கோரிக்கைகளுக்கு பிரதிபலிப்பாக சம்பந்தப்பட்ட தகவல் பெறுவதற்கான கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாக எமக்கு அறிவிக்கப்பட்ட பிரதிபலிப்புகள் அல்லது கவனம் செலுத்தும் வகையில் பல நாட்கள் கழிந்துள்ளபோதும் எந்தவொரு பிரதிபலிப்பும் கிடைக்காத

கோரிக்கைகள் தொடர்பில் 67 அடிப்படை மேன்முறையீடுள் செய்யப்பட்டுள்ளன. இதில் 27 மேன்முறையீடுகளுக்கான தகவல்கள் கிடைத்துள்ளதோடு அது சதவீத அடிப்படையில் 40 ஆகக் காணப்பட்டது. மேன்முறையீடு செய்யப்பட்ட பின்னரும் தகவல் கிடைக்காத கோரிக்கைகளின் எண்ணிக்கை 40 ஆகக் காணப்பட்டதோடு அது சதவீத அடிப்படையில் 60 ஆகக் காணப்பட்டது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

இதில் அடிப்படை மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும் கூட சம்பந்தப்பட்ட கோரிக்கைக்கான தகவல் கிடைக்காமை. அதாவது சதவீத அடிப்படையில் தகவல் பெறுவதற்கான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டிருந்த 60 சதவீதத்தினுள் பின்னவரும் பிரதிபலிப்புகள் அல்லது நிலைமைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

- சம்பந்தப்பட்ட கோரிக்கை தமது நிறுவனத்திற்கு ஏற்புடைய என்பதைத் தெரிவிக்கும் கடிதங்கள்
- சம்பந்தப்பட்ட தகவல்கள் தமது பொறுப்பில் இல்லை என்பதைத் தெரிவிக்கும் கடிதங்கள்.
- சம்பந்தப்பட்ட தகவல்கள் தமது பொறுப்பில் இல்லை என்பதைக் தெரிவித்து அதற்கென பொறுப்புக்கூற வேண்டிய ஏனைய நிறுவனம் பற்றி குறிப்பிடப்பட்டிருந்த கடிதங்கள்
- மேன்முறையீட்டுக் கடிதம் கிடைத்ததாகவும் அதனை ஆவணப்படுத்தியாகத் தெரிவித்தபோதும் அதற்கு பிரதிபலிப்பு கிடைக்காத கடிதங்கள்
- சம்பந்தப்பட்ட தகவலைப் பெற்றுக்கொள்வதற்காக தகவல் கோரிக்கையானது அதற்கு ஏற்புடைய ஏனைய நிறுவனம் ஒன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரியப்படுத்தியிருந்த கடிதங்கள்
- மேன்முறையீடு சமர்க்கிப்பட்ட போதும் அதற்கு உரிய பிரதிபலிப்பு கிடைக்காத சந்தர்ப்பங்களும் அடங்குகின்றன.

## 6. ஆய்வின் கண்டறிதல்கள்

### 6.1 <u>பகிரங்க அதிகார சபைகளில் தகவல்களை அறிவது பற்றிய சட்டம் பற்றிய கண்ணோட்டம்</u>

ஒட்டுமொத்தமாக நோக்கும் பகிரங்க அதிகார சபைகளில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பில் காணப்படுகின்ற நேரிடையான அணுகுமுறை இந்த ஆய்வின் விளைவாக வெளிப்படும் நிலையாகும். அதற்குக் காரணம் எமது நிறுவனத்தால் தகவல்களை பெறுவதற்கென சமர்ப்பிக்கப்பட்டிருந்த கோரிக்கைகளில் 92% கோரிக்கைளுக்கு ஏதேனுமொரு பிரதிபலிப்பு கிடைத்திருந்தது. எவ்வாறாயினும் எம்மால் கோரப்பட்டிருந்த தகவல்கள் கிடைக்கப்பெற்றமை 47% ஆகக் காணப்படுவதால் 100% நேரிடையான அனுகுமுறை காணப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். இந்த 47 சதவீதத்தை பெரும்பான்மை பெறுமானமாகக் குறிப்பிடப்படாவிடினும் தகவல் அறியும் உரிமை படிப்படியாக விருத்தி செய்யப்படக்கூடிய ஓர் உரிமையாகத் தென்படுவதோடு அதற்காக சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகார சபைகள் செயல்நுணுக்க வேலைத்திட்டம் ஒன்றை கொண்டிருக்க வேண்டும் என முன்மொழியப்படுகின்றது.

அதேபோல் சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகார சபைகளினால் தகவல் பெறுவதற்கான கோரிக்கைகள் தொடர்பில் எந்தவொரு பிரதிபலிப்பையும் வழங்கத் தவறியுள்ளமையானது அவற்றில் 8% எதிரிடையான அனுகுமுறை காணப்படுவதை வெளிப்படுத்தியுள்ளது.

தகவல் பெறுவதற்கான கோரிக்கைகள் சமரப்பிக்கப்பட்டமை தொடர்பில் எமக்குக் கிடைத்த தொலைபேசி அழைப்புக்களில் பகிரங்க அதிகார சபைகளில் காணப்படும் ஏதேனும் பலவீனத்தை வெளிப்படுத்திக்கொள்வதற்காக தகவல்கள் கோரப்படுகின்றனவா என்ற மனப்பாங்கு பல்வேறு அலுவலர்களிடம் காணப்படுவதை தகவல் பெறுதலுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடும் போது காணக்கூடியதாக இருந்தது. இந்த மனப்பாங்கு

தகவல்களை வழங்குவதில் பொறுப்பு மற்றும் பொறுப்புடைமை தொடர்பில் ஒருவித புறக்கணிப்பு நிலைமைக்கு இட்டுச் செல்வதோடு அதனை இல்லாதொழிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என முன்மொழியப்படுகின்றது.

ஒரு சில பகிரங்க அதிகார சபைகள் இறுக்கமான நிலையில் தனது பிரதிபலிப்பினை வெளிப்படுத்துவதனூடாக உள்ளதனூடாக பிரஜைகளின் உரிமைகளை மேம்படுத்துவதில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். மேலும் பகிரங்க அதிகார சபைகள் பயன்படுத்தும் சொற்பிரயோகங்களானவை குறித்த நிறுவனத்தின் அல்லது சம்பந்தப்பட்ட அலுவலரின் மனப்பாங்கினை நேரடியாக பிரதிபலிப்பதன் காரணமாக இந்தப் பிரதிபலிப்பு தொடர்பாடலானது பிரஜையை ஸ்தம்பிக்கச் செய்வதற்காக அன்றி உரிமைகளை மேம்படுத்தக்கூடிய வகையில் பயன்படுத்த முடியுமாயின் அது சட்டத்தின் குறிக்கோளாகக் கொண்டுள்ள தகவல் அறியும் காலாசாரமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு இன்றியமையாததாகக் காணப்படும்.

### 6.2 தகவல்களைக் கோருவது பற்றிய பிரதிபலிப்புக்களின் நிலைமை

கோரப்படும் தகவல்கள் பற்றிய பிரதிபலிப்புகள் மிகவும் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டதோடு அது சட்டம் பயனுறத் தொடங்கிய ஆரம்பக் காலத்திலேயே வெளிப்பட்ட சாதகமான ஒரு நிலை எனலாம். ஏனென்றால் மொத்தமாக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக விடுக்கப்பட்ட 203 கோரிக்கைகளில் 172 கோரிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தகவல் உண்டு அல்லது இல்லை என்பது பற்றிய திட்டவட்டமான பதிலை வழங்க பகிரங்க அதிகார சபைகள் நடவடிக்கை எடுத்துள்ளன. எவ்வாறாயினும் தகவல் பெறுவதற்கான 31 கோரிக்கைகள் தொடர்பில் உரிய தகவல் உண்டு அல்லது இல்லை என்ற திட்டவட்டமான பதிலை வழங்கப் பகிரங்க அதிகார சபைகள் தவறியுள்ளன. இதுவும் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய ஒரு விடயமாகும்.


எவ்வாறாயினும் தகவல் அறியும் உரிமையைப் பாதுகாப்பதன் முதற்கட்ட நடவடிக்கையாக சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகார சபைகள் உயர்ந்த மட்ட பிரதிபலிப்பை வெளிப்படுத்தியிருப்பதானது இலங்கைவாழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் இன்னும் ஓர் அங்கமாகக் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இப்புதிய அணுகுமுறை சாதகமாக அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது,


### 6.3 தகவல்களைக் கோருவது பற்றிய செயற்பாடுகளின் போது சட்டத்தின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட கால வரையறை பற்றி பகிரங்க அதிகார சபைகள் கவனிக்கின்றனவா?

இதில் சம்பந்தப்பட்ட நாட்கள் தொடர்பான கணிப்பின் போது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் பகிரங்க அதிகார சபைகளால் வேலை நாட்கள் மட்டும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதோடு..(சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, அரச விடுமுறை நாட்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை. சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகார சபைகளுக்குச் சாதகமாக அமையும் வகையில் அவை சம்பந்தப்பட்ட தகவலை அல்லது பதிலை பதிவுத் தபாலிட்ட திகதியல்லாது குறித்த தகவல் அல்லது பதிலை தயாரித்து ஒப்பமிட்ட திகதியை கணித்துள்ளனர் என்பதை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

| கிடைத்த மொத்த தகவல்களின் எண்ணிக்கை | 14 நாட்களுக்குள் கிடைத்த தகவல்களின் எண்ணிக்கை | 21 நாட்களுக்குள் கிடைத்த தகவல்களின் எண்ணிக்கை | 30 நாட்களுக்குள் கிடைத்த மொத்த தகவல்களின் எண்ணிக்கை | 121 நாட்களுக்குள் கிடைத்த தகவல்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| **95** | **30**/95 | 30 + **13** = **43** / 95 | 43 + **10** = **52** / 95 | 52 + **42** = **95** |

தகவல் பெறுவதற்கென விடுக்கப்பட்ட கோரிக்கைகளில் 14 நாட்களுக்குள் 30 கோரிக்கைகளுக்கான தகவல்கள் கிடைத்ததுடன் அது கிடைத்த மொத்த தகவல்களின் 32 % மாகக் காணப்பட்டது. அதே போல் 21 நாட்களுக்குள் 13 கோரிக்கைகளுக்கான தகவல்கள் கிடைத்ததுடன் அது கிடைத்துடன் அது கிடைத்த தகவல்களில் 14 சதவீதமாகவும் 30 நாட்களுக்குள் 10 கோரிக்கைகளுக்கான தகவல்கள் கிடைத்ததோ அது கிடைத்த தகவல்களில் 10 சதவீதமாகவும் காணப்பட்டது. மேலும் 121 நாட்களுக்குள் 42 கோரிக்கைகளுக்கான தகவல்கள் கிடைத்ததோடு அது கிடைத்த மொத்த தகவல்களில் 44 சதவீதத்தை பதிவுசெய்தது.






**6.4 <u>தகவல்களைக் கோருவதற்கு பிரதிபலிப்பைக் காட்டும் வகையில் பகிரங்க அதிகார சபைகளினால் கடிதங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் சில குறைபாடுகள் (Reference Error)</u>**

பகிரங்க அதிகார சபைகள் எம்மால் விடுக்கப்பட்ட தகவல் பெறுவதற்கான ஒரு சில கோரிக்கைகளுக்கான பிரதிபலிப்பின் போது சரியான முறையில் தொடர்புபடுத்துதலை / தொடர்பு இலக்கத்தை Reference இடவில்லை என்பது இந்த ஆய்வின் இன்னுமொரு கண்டறிதலாகும். இது பகிரங்க அதிகார சபைகளின் வினைத்திறனின்மையை எடுத்துக்காட்டுவதாக அமைந்ததுடன் பல விளைவுகளையும் தரக்கூடும் என்பதால் அது பற்றி கவனத்தில்கொள்ளப்படவேண்டியுள்ளது. அது பின்வரும் விளைவை ஏற்படுத்தக்கூடும்.

**உதாரணமாக A எனப்படும் நிறுவனத்திலிருந்து X Y Z என பல்வேறு தகவல்களைப் பெறுவதற்கான கோரிக்கைகளை தனித்தனியாக விடுக்கும் சந்தர்ப்பத்தில் அவ்வாறான தனித்தனியான கோரிக்கைகளுக்கு உரிய முறையில் இலக்கமிட சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகார சபைகள் தவறுமாயின் சம்பந்தப்பட்ட தகவல்களைப் பெறுவதற்கான கோரிக்கைகளின் பெரும்பான்மையானவை நிராகரிக்கப்படும். எனவே எந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்துகொள்வதில் சிரமம் ஏற்படும்.**

அதேபோல் உரிய முறையில் இலக்கமிடப்படாத கடிதம் ஒன்று தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்வது சிக்கலான ஒன்றாக அமைவதோடு அது பிரஜைகளின் உரிமைகளை பிரயோகிக்கும் செயற்பாட்டில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

அவ்வாறே அது மேன்முறையீட்டு நடவடிக்கை முறை மற்றும் சட்ட நடவடிக்கையின் போது ஆவணப்படுத்தப்பட்ட அடிப்படை சாட்சியமாகப் பயன்படுத்துவது தொடர்பில் சாட்சியத்தின் பெறுமதியைச் சிதைப்பதற்கு அல்லது அழிப்பதற்கு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.

எனவே, உரிய முறையில் இலக்கமிடுதல் / தொடர்புபடுத்தல் மேற்கொள்ளப்படாமையானது பிரஜைகளின் உரிமைகளை செயற்படுத்தும் விடயத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதோடு மறுபக்கத்தில் பகிரங்க அதிகார சபைகளில் காணப்படும் ஆவணப்படுத்தல் தொடர்பிலான வினைத்திறன் இன்மையை வெளிக்காட்டுவதாகவும் சுட்டிக்காட்ட முடியும்.

## 6.5 <u>மேற்படி சமமான தகவல்களைக்  கோருகையில் அதற்கு உரித்தான சமமான பகிரங்க அதிகார சபைகள் மேற்படி தகவல்கள் தொடர்பாக பொதுவான திட்டவட்டமான கருத்தைக் கொண்டிராத சந்தரப்பங்கள்</u>

நேரடியாகவே பாடசாலைக் கட்டமைப்புடன் தொடர்புபடுகிறது. நாட்டிலுள்ள ஒரு சில பிரபல பாடசாலைகளில் தரம் 1 க்கு மாணவ மாணவிகளை அனுமதித்தல் தொடர்பாகவும் அவ்வாறு அனுமதிப்பதற்கு அடிப்படையான காரணங்களை / பிரமாணங்களைக் கண்டறிவதற்காகவும் நாம் அவற்றிலிருந்து தகவல்களைப் பெறுவதற்கான கோரிக்கைகளை சமர்ப்பித்திருந்தோம் என்பதை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது, இவ்விடயத்தில் அனேகமான பாடசாலைகள் புதுமையைக் கொண்டிருக்கவில்லை. என்ற விடயம் ஆய்வின் ஒரு சிறப்பம்சமாகும். மேற்படி பாடசாலைகள் குறித்த பாடசாலைகளின் பிரதிபலிப்புகளாவன :

- சம்பந்தப்பட்ட தகவல்களை வழங்குதல்
- குறித்த பாடசாலை பகிரங்க அதிகார சபை என்ற வகுதிக்குள் அடங்கவிலலை என்பதைத் தெரிவித்து சம்பந்தப்பட்ட தகவல் வழங்கப்படுவதை மறுத்தல்
- தகவல்களை வழங்குவதற்கு கல்வி அமைச்சின் முன்னனுமதி அவசியம் எனத் தெரிவித்தல்
- சம்பந்தப்பட்ட தகவல்களை வழங்குவது பாடசாலைகளின் பணியல்ல. கல்வி அமைச்சின் பணி என்பதைத் தெரிவித்தல் போன்ற ஒன்றுக்கொன்று முரணான பிரதிபலிப்புகள்.

எவ்வாறாயினும் அதன் பின்னர் கல்வி அமைச்சினால் சம்பந்தப்பட்ட தகவலை குறித்த பாடசாலையின் அதிபர் வழங்க வேண்டும் எனத் தெரிவித்து பாடசாலைகளுக்கு பணிப்புரை விடுத்ததன் ஊடாக இவ்விடயம் தொடர்பில் ஒரு நிலைப்பாட்டிலிருந்து செயற்படுவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இது தகவல்களை வழங்குவது தொடர்பில் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் ஒன்றின் அவசியத்தை வலுவாக வலியுறுத்தி நிற்கின்றது.

## 6.6 <u>பகிரங்க அதிகார சபைகளிடமுள்ள ஏனைய தகவல்கள் இல்லாதுவிடின் அவை அது தொடர்பாக சரியான நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கின்றனவா ?</u>

பகிரங்க அதிகார சபையொன்றில் ஏற்புடைய தகவல்கள் இல்லாத சந்தர்பபத்தில் அத்தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஏனைய அதிகார சபையொன்றை குறிப்பிடுதலும் ஏற்புடைய தகவல்களைப் பெறுவதற்கான கோரிக்கையை பொறுப்பு வாய்ந்த பகிரங்க அதிகார சபையொன்றுக்கு இரண்டு அணுகுமுறையைக் கொண்டுள்ளன. அதாவது ஏற்புடைய தகவல்கள் இருக்கின்ற ஏனைய பகிரங்க அதிகார சபையொன்றைக் குறிப்பிடுதல். தகவல் அறியும் உரிமையை பாதுகாப்பதில் ஓரளவுக்கு பங்களிப்பைச் செலுத்தியிருந்த போதும் கோரிக்கையை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்குச் சமர்ப்பித்து பிரஜைகளுக்கு தகுந்த நடவடிக்கை எடுப்பதன் மூலம் ஏற்கனவே குறிப்பிட்ட பங்களிப்பை விட பிரஜைக்கு பிரஜையின் உரிமையைப் பாதுகாப்பதற்கு பகிரங்க அதிகார சபைகள் கொண்டுள்ள கடமையும் பொறுப்பும் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதாக அறிய முடியும்.

எவ்வறாயினும் இது நேரடியாகவே பகிரங்க அதிகார சபைகளின் அலுவலர்கள் கொண்டுள்ள மனப்பாங்கு ரீதியான குணாம்சங்களை வெளிப்படுத்துவதோடு அந்த உரிமையை தகவல் அறியும் உரிமையை மேம்படுத்துவது தொடர்பிலும் அதன் எதிர்காலம் தொடர்பிலும் நேரடியாகவே பின்னிப் பிணைந்துள்ளது.. எவ்வாறாயினும் 49 பகிரங்க அதிகார சபைகள் பிற நிறுவனங்களைக் குறிப்பிடுதல் அல்லது அதற்கும் அப்பால் குறித்த நிறுவனங்களுக்கு தகவலுக்கான கோரிக்கைகளை சமர்ப்பித்திருப்பதானது சாதகமான போக்கினைக் காண்பித்துள்ளதோடு இந்தக் கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கான முறையான வேலைத்திட்டம் ஒன்றின் தேவை அதன் உறுதிப்பாட்டில் கட்டாயமாகத் தாக்கம் செலுத்தக் கூடும்.

## 6.7 நியாயமான காரணங்களின் நிமித்தம் அல்லது வேறு காரணங்களின் நிமித்தம் தகவல் வழங்கப்படுவது நிராகரிக்கப்படுகின்றதா ?

தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கென எம்மால் விடுக்கப்பட்ட 29 கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளதோடு அவற்றில் பல நிராகரிக்கப்படுவதற்கு பிரதான காரணம் சட்டத்தின் 5 ஆவது உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கோரப்பட்டுள்ள தகவல்கள் தமது அதிகார சபையின் கட்டுப்பாட்டில் அல்லது பொறுப்பில் இல்லாமையே என பகிரங்க அதிகார சபைகளினால் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் சம்பந்தப்பட்ட தகவல் கோாரிக்கை தமது விடயப்பரப்பிற்கு உரியதல்ல எனத் தெரிவித்த ஒரு சில பொது அதிகார சபைகள் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை நிராகரித்துள்ளதோடு அவற்றிலும் ஒரு சில பகிரங்க அதிகார சபைகள் கோரிக்கைகளை ஏனைய பொது அதிகார சபைகளிடம் சமர்ப்பித்திருந்தமையும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கோரப்படும் தகவல்கள் தமது பொறுப்பில் இல்லாதவிடத்து பகிரங்க அதிகார சபைகள் அதற்குரிய காரணங்களைத் தெரிவிக்க வேண்டியிருப்பதானது சம்பந்தப்பட்ட நிராகரிப்பின் வெளிப்படைத் தன்மை பிரஜைகளின் தகவல் அறியும் உரிமையை பாதுகாப்பதில் கட்டாய பங்களிப்பை செலுத்தி வருகிறது ஏனெனில் பகிரங்க அதிகார சபைகளின் ஒவ்வொரு முடிபு தொடர்பாகவும் நியாயமான தெளிவுபடுத்தல் ஒன்றை பிரஜைகள் எதிர்பார்ப்பதற்குக் காரணம் அவை தமது முன்னேற்றத்தின் பொருட்டு செயற்படும் நிறுவனங்களாக இருப்பதே ஆகும். அவ்வாறே தகவல் அறியும் உரிமையும் நேரடியாக காரணத்தை தெரிவித்தலும் பின்னிப் பிணைந்த விடயங்களாக இருப்பதன் காரணமாக சம்பந்தப்பட்ட தகவலுக்கான கோரிக்கை எந்த அடிப்படையில் நிராகரிக்கப்படினும் அது பற்றி விவரமானதும் தெளிவானதுமான விளக்கமளிப்பு இருக்க வேண்டும் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

## 6.8 பிரதிபலிக்க நீண்டகாலம் எடுக்கப்படும் தகவல்களை அறியும் உரிமை பற்றிய சட்டம் வரையுள்ள ஒழுங்கான செயன்முறை பகிரங்க அதிகார சபைகளினால் அனுசரிக்கப்படுகின்றதா?

அனேகமான பகிரங்க அதிகார சபைகள் தகவல் பெறுவதற்கான கோரிக்கைகளுக்கு பிரதிபலிப்பை வெளிப்படுத்துவதற்கும் தகவல்களை வழங்குவதற்கும் சட்டத்தால் குறித்து வைக்கப்பட்டுள்ள காலத்தை விட அதிக காலத்தை எடுத்துள்ளமை இந்த ஆய்வின் மற்றுமொரு கண்டறிதல் ஆகும். மேலும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது பிரதிபலிப்பை 14 நாட்களுக்குள் வழங்க 203 பகிரங்க அதிகார சபைகளில் 68 பகிரங்க அதிகார சபைகள் தவறியுள்ள என்பதைக் குறிப்பிட வேண்டும். சதவீத அடிப்படையில் அது 33.49 சதவீத வருமானத்தைக் கொண்டுள்ளதோடு 135 பகிரங்க அதிகார சபைகள் அதாவது பெரும்பான்மையான பகிரங்க அதிகார சபைகள் 14 நாட்களுக்குள் உரிய தகவல்கள் உண்டு அல்லது இல்லை என்பது பற்றியும் தகவல் வழங்கப்படுதல் அல்லது நிராகரித்தல் பற்றியும் தமது பிரதிபலிப்பை வெளிப்படுத்தியுள்ளனர். சதவீத அடிப்படையில் அது 66.50 என்ற பெறுமானத்தைக் கொண்டுள்ளது. இங்கு 14 நாட்களுக்குள் ஏதேனுமொரு பிரதிபலிப்பை வெளிப்படுத்தாத பகிரங்க அதிகார சபைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அதில் தாக்கம்

செலுத்திய விடயங்களை ஆய்வு செய்வதனூடாக அதற்கான தீர்வினைத் தேட வேண்டும். உண்மையாகவே 14 நாட்களுக்குள் ஏதேனுமொரு பிரதிபலிப்பை வெளிப்படுத்த சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகார சபைகள் தவறுவதானது பிரஜைகளின் தகவல் அறியும் உரிமை தொடர்பில் பாதகமான தாக்கத்தை செலுத்துவதோடு மற்றுமொரு கோணத்தில் அது சட்டத்தால் விதிக்கிடைக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுடன் முறண்படுவதாகவும் அமைகின்றது.

ஒட்டுமொத்தமாக நோக்கும் போது 135 பகிரங்க அதிகார சபைகள் சட்டத்தால் உரித்துரைக்கப்பட்டுள்ள காலப் பகுதியினுள் செயற்பட்டுள்ளமை தகவல் அறியும் உரிமைச் சட்டம் பயனுறத் தொடங்கிய ஆரம்ப கட்டத்திலேயே ஈட்டிக்கொண்ட ஒரு சாதகமான ஒரு நிலை என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது. மேலும் தகவல் பெறுவதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டு 14 நாட்களுக்குள் ஏதேனுமொரு பங்களிப்பை வெளிப்படுத்தி பின்னர் உரிய தகவலை வழங்குவதற்கு அல்லது நிராகரிப்பதற்கு சம்பந்தப்பட்ட 135 பகிரங்க அதிகார சபைகளுள் பெரும்பான்மையானவை தாமதமாகியுள்ளமை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். நடைமுறையில் தகவல் அலுவலராகச் செயற்படும் குறித்த அலுவலகர் குறித்த கருமத்திற்கென பணியில் ஈடுபடுத்தப்படாமல் ஏனைய கடமைகளுக்கு மத்தியில் தகவலை வழங்குவதற்கு அல்லது நிராகரிப்பதற்கு சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள கால எல்லையினுள் செயற்படுவதும் கடினமாக உள்ளமை இச்சிக்கலுக்குரிய காரணமென தெரிவிக்கப்படுகின்ற போதிலும் சட்டத்தின் 24 (3) உபவாசகத்தின் படி சம்பந்தப்பட்ட தகவலுக்கான கோரிக்கை தொடர்பில் பிரதிபலிப்பை வெளிப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தகவல் அலுவலர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### 6.9 தகவல்களை அறிவதற்கான உரிமை பற்றிய சட்டத்தின் மூலம் மேலும் உள்ளடக்கவேண்டிய துறைகள்

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (1) ஆம் வாசகமானது இலங்கையிலுள்ள சகல பிரஜைகளுக்கும் தகவல் அறிவதற்கான உரிமை உண்டென்பதை வலியுறுத்தியுள்ளது. பிரஜை என்பதற்கு சட்டத்தினால் தெளிவான பொருள்கோடல் ஒன்று வழங்கப்பட்டுள்ளதோடு இந்த உரிமை சகல பிரஜைகளுக்கும் உண்டு. எவ்வாறாயினும் விசேட தேவையுடைய பிரஜைகளினால் விடுக்கப்படுகின்ற தகவலுக்கான கோரிக்கையின் போது பிரதிபலிப்புகளை வெளிப்படுத்துவதில் கடைப்பிடிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறை தொடர்பில் சட்டத்தினால் உரிய விளக்கம் தரப்படாமை எதிர்மறையான நிலையை உருவாக்கியுள்ளது.

நாம் இவ்விடயம் பற்றி நேரடியாகவே தகவல் ஆணைக்குழுவிடம் தகவல் பெறுவதற்கான ஒரு கோரிக்கையாக முன்வைத்த போது ஆணைக்குழுவானது அதன் பொறுப்பிலுள்ள தகவல்களை கட்புலன் பாதிக்கப்பட்ட பிரஜையொருவருக்கு பிரேல் வடிவில் பெற்றுக்கொடுப்பதற்கான வசதிகள் இல்லை என்பதையும் சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள் அவ்வாறான வசதிகளைக் கொண்டுள்ளனவா என்பது பற்றி அவற்றிடமே வினவவேண்டும் எனவும் தனது பிரதிபலிப்பை வெளிப்படுத்தியுள்ளது. இதனூடாக மேலே சொல்லப்பட்டவாறான ஒரு சந்தர்ப்பத்தில் தகவல் அறிவதற்கான உரிமை பற்றிய ஆணைக்குழுவிடம் இதற்கான பொறிமுறை ஒன்று இல்லையென்பதையும் அதன் மூலம் தகவல் அறியும் உரிமையை பிரயோகிக்கும் போது ஒரு சில குறைபாடுகள் காணப்படுவதையும் அறிந்துகொள்ள முடிகிறது. தகவல் அறியும் உரிமை பற்றிய முதன்மையான நிறுவனமாகக் காணப்படுகின்ற தகவல் அறியும் உரிமை பற்றிய ஆணைக்குழு இவ்விடயம் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

## 7. <u>அடையாளம் கண்ட குறைபாடுகள் தவறுகள் என்பவற்றை தவிர்த்துக்கொண்டு இலங்கைப் பிரஜைகளின் தகவல்களை அறியும் உரிமையைப் பாதுகாப்பதற்கும் அவற்றை ஒழுங்குமுறைப்படுத்துவதற்குமான பரிந்துரைகள்</u>

1. பகிரங்க அதிகார சபைகளில் கடமையாற்றும் அலுவலர்களுக்கென தகவலை அறிந்துகொள்வதில் பிரஜைகளுக்கு காணப்படும் உரிமையின் முக்கியத்துவம் மற்றும் அவ்வுரிமையைப் பாதுகாப்பதில் அவர்கள் கொண்டுள்ள கடமை மற்றும் பொறுப்பின் தன்மையை வெளிப்படுத்தும் முறையான நிகழ்ச்சித் திட்டங்களின் தேவை காணப்படுகின்றது. இது நேரடியாகவே பகிரங்க அதிகார சபைகள் கொண்டுள்ள மனப்பாங்கு ரீதியான மாற்றத்துக்கு வழி வகுத்து பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாக்க பங்களிப்புச் செலுத்தும்.

2. சட்டத்தால் குறித்துரைக்கப்பட்டுள்ள திட்டவட்டமான கால எல்லையினுள் செயல்படுவதை ஒழுங்குமுறைப் படுத்தல் சட்டத்தால் துரித/அத்தியாவசிய கடமையாகக் கருதப்படல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. தகவல் மறக்கப்படும் பட்சத்தில் அது எந்த அடிப்படையில் மறக்கப்படுகிறது என்பதை தெரிவிப்பதற்கு சரியான வேலைத்திட்டமொன்று அவசியமாகிறது.

4. மேலும் அச்சட்டத்தின் 5வது உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய தகவல் மறக்கப்படுவது தொடர்பில் 5வது படிவம் நடைமுறையில் ஏற்புடைய தகவல்கள் மறக்கப்படுவதற்கான அடிப்படை தொடர்பில் அதாவது கோரப்பட்டுள்ள தகவல் தெளிவின்மை காரணமாக மேற்கொள்ளப்படும் பிரதிபலிப்பு / நிராகரிப்பு தொடர்பில் பலவீனமான நிலை காணப்படுவதால், அதற்கென பொருத்தமான தெளிவான விளக்கமொன்றை சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப்பட வேண்டும்.

5. தகவல்களை வழங்குதல் முன்னேற்பாட்டு வெளிப்படுத்தலாக **(Proactive Disclose)** இருக்க வேண்டும் என்ற எண்ணக்கருவை பாதுகாத்து தகவல் மறுக்கப்படுவதற்கான பிரிவுகள் தொடர்பில் விரிவான பொருள் கோடல் அவசியமாகின்றது.

6. தகவல் கோரப்பட்டுள்ள மொழியில் அதற்கான பிரதிபலிப்பு அமைவதை உறுதிப்படுத்தல் இதனூடாக தகவல் எம்மொழியில் உள்ளதோ அதற்கப்பால் பிரஜை கோரியுள்ள மொழியில் தகவல் வழங்குவதானது திருத்தம் வழங்கப்பட வேண்டும் எனக் கருதவில்லை என்பதுடன் பிரஜைகளின் மொழி உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

7. தகவல் வழங்கல் தொடர்பிலும் அதற்கான மேன்முறையீடுகள் தொடர்பிலும் பிரஜைகளை கொழும்புக்கு அழைப்பதானது அவர்களின் உரிமைகளைப் செயற்படுத்துவதில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் தகவல் அறியும் உரிமை தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு பிராந்திய நிலையங்களை (Regional Centers) உருவாக்கி தகவல் உரிமையைப் பாதுகாப்பதற்கு மாத்திரமன்றி நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான அவசியத்தையும் பேண நடவடிக்கை எடுத்தல்.

8. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஒரு மாகாணத்தில் என்ற அடிப்படையில் ஒட்டுமொத்த மாகாணங்களுக்கும் எனத் தகவல் பெறுவதற்கான கோரிக்கைகளை ஆராயும் விசேட பொறிமுறை ஒன்றை அமைத்து நடைமுறைப்படுத்த முடியுமாயின் அது பிரஜைகளிடம் நல்லாட்சி தொடர்பான விருப்பம் / கவனத்தை மேம்படுத்துவதில் உதவியாக அமையும்

9. அலுவல்களை வழங்குதல் தகவல் அலுவலர்களின் பொறுப்பாகவும் அந்த உரிமையைச் செயற்படுத்துவதில் விழிப்புடன் இருக்க வேண்டியது பிரஜைகளது கடமையாகவும் உள்ளது. ஏனெனில் இதனை தனியே ஒரு தரப்பின் புரிதலினால் மாத்திரம் சாதிக்க முடியாது என்பதுடன் அலுவலர்களினதும் பிரஜைகளினதும் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் பொறுப்பின் வழி நின்று முன்னேறிச் செல்ல வேண்டிய பயனமாகும். எனவே அதற்குத் தேவையான இணைத் தொடர்பை மேம்படுத்தி பாதுகாத்தல் பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள் மற்றும் நபர்களின் கவனம் அவசியமாகத் திரும்ப வேண்டும்.